DANCEMOTION USA℠

# ஸ்பெக்ட்ரம் டான்ஸ் தியேட்டர், சியாட்டில், WA

ஸ்பெக்ட்ரம் டான்ஸ் தியேட்டர், 1982 இல் சியாட்டிலில் ஸ்தாபிக்கபட்டது . எதிர்பார்ப்புகளுக்கு சவால் விடுகின்ற மற்றும் வலிமையான உணர்வுகளையும் சிந்தனையார்ந்த ஏற்புத் தன்மைகளையும் தூண்டுகின்ற சர்வதேச திறமையின் நவீன நடனக் கலையை உருவாக்கி வழங்குவது; அனைவருக்கும் பல்வேறு வகையான நடன வடிவங்களில் நிபுணத்துவ நடன அறிவுறுத்தலைக் கொடுப்பது; கலை வடிவமாகவும் பொது/குடிமைசார் சாதனமாகவும் நடனத்தைப் பற்றி சமூகத்திற்கு கல்வி புகட்டுவது ஆகியவையே இதன் நோக்கம். டொனால்ட் பைர்டினுடைய முன்னோக்கு பார்வை கொண்ட கலைத்திறன் தலைமையின் கீழ், பிராந்திய மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக ஸ்பெக்ட்ரம் உருவெடுத்துள்ளது. இந்நிறுவனம், உலகத்தர நடனக் கலைஞர்களை ஈர்ப்பதுடன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா முழுவதிலும் பயணம் மேற்கொண்டு தற்காலிக மற்றும் விமர்சகர்களால் பாராட்டி வரவேற்பளிக்கும் வகையில் நவீன நடனத்தில் எழுச்சி மிக்க மற்றும் சவால் மிகுந்த படைப்புகளை உருவாக்குகிறது.

**கலைத்திறன் கொண்ட இயக்குனரைப் பற்றி**
பெஸ்ஸீஸ்-விருது வென்ற நடன அமைப்பாளரான டொனால்ட் பைர்ட், டிசம்பர் 2002 இல் ஸ்பெக்ட்ரம் டான்ஸ் தியேட்டரின் படைப்பு இயக்குனராக ஆனார். 1978 முதல் 2002 வரை, தேசிய மற்றும் சர்வதேச அளவில் விரிவான பயணம் செய்து நடுநிலை மதிப்பீட்டாற்றலுடன் பாராட்டி வரவேற்பளித்த நவீன நடன நிறுவனமான டொனால்ட் பைர்ட்/தி கம்பெனி'யின் படைப்பு இயக்குனராக இருந்தார். அவர் தனது சொந்த குழுக்களுக்கும், டேடான் நவீன நடன நிறுவனமான ஆல்வின் ஐலே அமெரிக்கன் டான்ஸ் தியேட்டருக்கும், ஃபில்லெட்ஃபியா நடனக் கம்பெனி (ஃபிலடான்கோ) இற்கும், இன்னும் பலருக்குமாக 80 இக்கும் மேற்பட்ட நவீன நடனப் படைப்புகளை உருவாக்கியுள்ளார். பசிஃபிக் நார்த்வெஸ்ட் பேலெட், தி ஜாஃப்ரே பேலெட், ஆடெர்பெல்லெட்டோ, மாக்கியோ டான்ஸா டிஃபெரென்ஸ், ஓரிகான் பேலெட் தியேட்டர் போன்றவை உட்பட பாரம்பரியமான நிறுவனங்கள் பலவற்றிற்கும் நடன அமைப்பாளராய் செயல்பட்டுள்ளார். நியூயார்க் ஷேக்ஸ்பியர் ஃபெஸ்டிவல்/பப்ளிக் தியேட்டர், லா ஜோல்லா ப்ளேஹவுஸ், சான் ஃப்ரான்ஸிஸ்கோ ஓபெரா, நியூயார்க் சிட்டி ஓபெரா போன்றவை உட்பட மிகவும் மதிப்புமிக்க தியேட்டர் சிலவற்றுடனும், ஓபெரா நிறுவனங்களுடனும் இவர் பணி புரிந்துள்ளார். பைர்ட் இற்கு 2005 இல் மாஸ்டர் ஆஃப் கோரியோகிராபி விருது வழங்கி கென்னடி சென்டர் கௌரவித்தது, அத்துடன் 2006 இல், "தி கலர் பர்பிள்" எனும் தனது நடன அமைப்பிற்காக டோனி பெயரீட்டைப் பெற்றார். பைர்ட், மிகச் சமீபத்தில், ஜெருசலேமில் உள்ள அமெரிக்கன் அகாடமிக்கான முதல் தோழமைக் குழுவில் இருந்ததுடன், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆர்டிஸ்ட் இன் 2011 ஜேம்ஸ் பால்ட்வின் ஃபெல்லோ எனப் பெயர் பெற்றார்.

**பத்திரிகைச் செய்தி**
"ஒவ்வொரு கோடும் இந்நடனக் குழுவின் எல்லைக்கு விரிவுபடுத்தப்படுவதுடன், தீவிரமான செயற்றிறனைக் கொண்ட இக்கலைக் குழுவின் வியத்தகு திறமையையும் கட்டுப்பாட்டையும் வெளிப்படுத்துகிறது."
*சியாட்டில் டான்ஸஸ்* (10/2/2011)
http://seattledances.blogspot.com/2011/10/beast-spectrums-ferocious-debut.html

"...நகரிலேயே மிகவும் சவாலான, கவர்ச்சிகரமான, மனதை மயக்குகின்ற நடனக் குழு."
*சியாட்டில் டைம்ஸ்* (10/16/10)
http://seattletimes.nwsource.com/html/thearts/2013182665_spectrum21.html

**நிறுவன இணையதளம்**
http://spectrumdance.org/

**வீடியோ மேற்கோள்கள்:**
https://vimeo.com/45341676

DEPARTMENT OF STATE UNITED STATES OF AMERICA

BAM